# அம்பத்தூர்  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 263/2023

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி. உ. தாரணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2026ம் ஆண்டு  ஏப்ரல் திங்கள் 15-ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| வா.சா.1 | 15.04.2026 |
| பெயர் சந்தானகுமார் | தந்தை/ கணவர் பெயர் |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

<u>2,3 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>:-

1. எதற்காக வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் 1ம்பிரதிவாதி என்னிடம் பணம் வாங்கிவிட்டு எனக்கு இடத்தை கிரையம் செய்யாததால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தை சம்மந்தமாக எனக்கு பவர் கொடுத்துவிட்டார். நான் சொத்திற்கான பணத்தை முழுவதும் 1ம் பிரதிவாதியிடம் கொடுத்துவிட்டேன். எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் தான் சொத்தில் பிரச்சணை என்றால் சரிதான். நான் வழக்கு சொத்தில் அனுபவத்தில் உள்ளேனா என்றால்  வழக்கு சொத்தில் காம்பவுன்ட் கட்டி வைத்துள்ளேன். வழக்கு சொத்து சம்மந்தமாக கிரையம்பத்திரம் எதுவும் பதிவு செய்யக்கூடாது என்று 2ம் பிரதிவாதியிடம் மனுகொடுத்தேனா என்றால் கொடுத்துள்ளேன்.

2. மேற்கூறிய மனுவை நான் வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். நான் கூறியவாறு மனு எதுவும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மனுவிற்கு 2ம் பிரதிவாதி கொடுத்ததாக சொல்லும் பதில்கடிதத்தை நான் வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். 2ம் பிரதிவாதி பதில்கடிதத்தில் என்ன சொல்லியுள்ளார் என்றால் சட்டத்திற்கு உட்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லபட்டது. நான் கூறும் பதில் கடிதம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2,3 பிரதிவாதிகள் ஆவணங்களை சரிபார்த்துதான் பதிவுசெய்வார்கள் என்றாலும் 2ம்பிரதிவாதி பத்திரத்தை பதிவு செய்யகூடாது என்று என்னால் பரிகாரம் கேட்கமுடியாது என்றாலும் 2,3 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது, மறு விசாரணை இல்லை.